**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.186/2021**

2024 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 05 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கிட்டான் (அ.சா.2) | தொழில் | : | – |
| த/பெ., க/பெ. | : | முனியன் | வயது | : | 75 |
| கிராமம் | : | பெரிச்சிபாளையம் | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 05.12.2024 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் பெரிச்சிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 பன்னீர்செல்வத்தை தெரியாது. பட்டியல் சாட்சி நடராஜை தெரியாது. ஆஜர் எதிரிகள் எனக்கு உறவினர்கள். எதிரிகளுக்கும், அ.சா.1–க்கும் நடந்த பிரச்சனை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 15.11.2017 ஆம் தேதி மதியம் 02.30 மணிக்கு பெரிச்சிபாளையம் சுந்தரம் மளிகை கடை அருகே ரவி, நடராஜ் மற்றும் பன்னீர்செல்வமும் நடந்துவந்து கொண்டிருந்தார்கள் என்றும், அப்பொழுது

**அங்கு வந்த அன்பழகன் மற்றும் ஆஜர் எதிரிகள் அவர்களை வழிமறித்தார்கள் என்றும், அசிங்கமாக பேசியும், அவர்களை வெட்டிக்கொல்லுங்கடா என அன்பழகன் கூறினார் என்றும், அன்பழகன் தான் வைத்திருந்த அருவாளால் ரவியை வெட்ட முயன்றபோது பன்னீர்செல்வம் தடுத்தார் என்றும், அதில் அவருக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது என்றும், சத்தியராஜ் அவரை கல்லால் அவரது இடது தொடையில் குத்தி காயம் உண்டுபண்ணி உலகநாதன், நடராஜனை தான் வைத்திருந்த கத்தியால் வயிற்றில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், ஜெகநாதன், மோகன்ராஜ், விவேகானந்தன் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த இரும்புக் கம்பி போன்ற ஆயுதங்களால் அவர்களை அடிக்க வரவும், உலகநாதன் தான் வைத்திருந்த கத்தியால் நடராஜன் அவரது இடது பக்க கையில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், பன்னீர்செல்வம் சத்தம்போடவே அங்கிருந்த நாங்கள் ஓடிவரவும், எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் நடராஜனும், பன்னீர்செல்வமும் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.**

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.12.05 18:18:45 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**